# வந்தவாசி நகராட்சி

## நகரமன்ற சிறப்பு கூட்டம்

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 3வது அட்டவணையில் 2 (3) விதியின் கீழ் இந்நகரமன்றத்தின் **சிறப்புக் கூட்டம் 05-06-2026 தேதியன்று வெள்ளிக்கிழமை** காலை 10.30 மணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும், தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**திருக்குறள்:-**

**" நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான் இன்று அமையாது ஒழுக்கு ".**

**விளக்கம்:**

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

**மன்றப்பொருள்**

**தீர்மானம் எண்.1** SBM 2.0 -திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-உலக சுற்றுச்சூழல் தினம் (WED) அனுசரிப்பு – 2026-தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், திடக்கவு மேலாண்மை விதிகள் 2026-ஐ நடைமுறைப்படுத்து வதற்குமான 2026 ஜுன் 5 முதல் 12 வரை நடைபெறும் ஒரு வார கால பிரச்சாரம் இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள், டி.ஓ.எண். 2/3/2023- SBM -IV , வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், இந்திய அரசு, நாள்.29-05-2026-ல் இந்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் , திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026, 01-04-2026 முதல் அமுலுக்கு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த விதிகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதத்தில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026-ஐ செயல்படுத்தும் நிகழ்வில் வரும் 05-06-2026 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சுற்றுசூழல் குறித்து அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வந்தவாசி நகராட்சியில் நகரமன்ற தலைவர், நகரமன்ற துணை தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(தீர்மானம் எண்.1 வந்தவாசி நகரமன்றத்தின் சிறப்பு கூட்டம் 04-06-2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நகர மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.)

H [signature] 5/6-2026

நகரமன்றத் தலைவர்,
வந்தவாசி நகராட்சி